# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 38/2021** நாள்: 04.10.2021

### ஊரக உள்ளாட்சி சாதாரணத் தேர்தல்கள் - 2021

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 01.10.2021-ஆம் தேதிய தீர்ப்பாணையின்படி, அனைத்து வாக்குச்சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணுகை மையங்களில் சிசிடிவி(அ) வீடியோ ஒளிப்பதிவு (அ) இணைய வழி வீடியோப்பதிவு (Web Streaming) அமைப்பது குறித்தும், அமைதியான முறையில் உள்ளாட்சி தேர்தல் நடத்துவது குறித்தும் 9 மாவட்ட தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் காணொலிக் காட்சி ஆய்வுக்கூட்டம்**

சென்னை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 01.10.2021-ஆம் தேதிய தீர்ப்பாணையின்படி, அனைத்து வாக்குச்சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணுகை மையங்களில் சிசிடிவி(அ) வீடியோ ஒளிப்பதிவு (அ) இணைய வழி வீடியோப்பதிவு (Web Streaming) அமைப்பது குறித்தும், அமைதியான முறையில் உள்ளாட்சி தேர்தல் நடத்துவது குறித்தும் 9 மாவட்ட தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் காணொலி காட்சி ஆய்வுக்கூட்டம் இன்று (04.10.2021) நடைபெற்றது.

..2..

இக்கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., கூடுதல் காவல் தலைவர் திரு ஜி.வெங்கடராமன், இ.கா.ப., காவல் உதவி தலைவர் (தலைமையிடம்) முனைவர் எம். துரை, இ.கா.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு க. அருண்மணி, உதவி ஆணையர் (தேர்தல்) திரு அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்தில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 01.10.2021-ஆம் தேதிய தீர்ப்பாணையின்படி, அனைத்து வாக்குச்சாவடிகளில் சிசிடிவி(அ) வீடியோ ஒளிப்பதிவு (அ) இணைய வழி வீடியோப்பதிவு அமைப்பது, அனைத்து வாக்கு எண்ணும் மையங்களின் உள்ளேயும், வெளியேயும், சிசிடிவி அமைப்பது, அமைதியான முறையில் உள்ளாட்சி தேர்தல் நடத்துவது மற்றும் 74 வட்டார தேர்தல் பார்வையாளர்கள் **(Block Observers)**நியமனம் செய்யப்பட்டது குறித்தும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் இக்கூட்டத்தில் நுண் மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் கூடுதலாக சிசிடிவி கேமரா பொருத்திட 9 மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. 9 மாவட்ட தேர்தல் அலுவலர்களும், மாவட்ட தேர்தல் கண்காணிப்பாளர்களும் கவனமுடன் செயல்பட்டு அமைதியான முறையில், தேர்தல் நடத்தப்பெற இருப்பதை உறுதி செய்திட அறிவுரை வழங்கினார்கள்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

04/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்